**M/s கேன்பின் ஹோம்ஸ் லிட்.**

நெ.1, ஜான்சன்பேட்டை ரோடு, அஸ்தம்பட்டி,
சேலம் - 636 007. Ph : 0427-2420017, 7625079158
CIN: L85110KA1987PLC008699

Can Fin Homes Ltd
(Sponsor: CANARA BANK)
Translating Dreams into Reality

# அசையா சொத்திற்கான ஏல விற்பனை அறிவிப்பு

பிணைக்காப்பு நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம், 2002, பிரிவு 13(2)–ன் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் கீழே கையொப்பம் செய்துள்ள **கேன் ஃபின் ஹோம்ஸ் லிட்**, அதிகாரம் பெற்ற அலுவலர் அவர்கள் **13-12-2017** தேதியிட்ட கேட்பு அறிவிப்பில் குறிப்பிட்ட கடன்தொகையான **ரூ.59,70,514/-** மற்றும் பின்னிட்ட வட்டி சேர்த்து அறிவிப்பு பெற்ற 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்த வேண்டுமென்று கடன்தாரர்கள் **திரு. D.செந்தில்குமார் & திருமதி. S.சுஹாசினி** ஆகியோருக்கு அனுப்பப்பட்டது.

மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை சட்டப்பூர்வமான காலத்திற்குள் செலுத்தத் தவறியதால், மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதி முறைகளின்படியும் 8வது விதியின்படியும் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை நிறுவனத்தின் வசம் உடைமையாக்கியுள்ளார்.

குறிப்பாக கடன்தாரர் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு குறிப்பிடுவது யாதெனில் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை முழுவதுமாக தற்போது உள்ளது உள்ளபடி என்ற நிலையில் விற்பனை செய்யப்படும். பொதுமக்களிடமிருந்து மூடப்பட்ட உறையில் டெண்டர் படிவங்கள் வரவேற்பதன் மூலம் கீழே குறிப்பிட்டுள்ள நாள் மற்றும் இடத்தில் ஏலம் நடைபெறும். ஏலம் கேட்க விருப்பமுள்ளவர்கள் ஏலத்தில் பங்கேற்க முடியும்.

## சொத்து விபரம்

இச்சொத்தானது சேலம் மாவட்டம், சேலம் கிழக்கு பதிவு மாவட்டம், தாதகாப்பட்டி துணைப்பதிவு மாவட்டம், சேலம் தாலுக்கா, தாதகாப்பட்டி கிராமம், தற்போதைய படி கதவு எண்.186-A, ரீசர்வே மற்றும் செட்டில்மெண்ட் பட்டா நெ.299, R.S. No.61 காலி நிலம் 0.00.5 ஹெக்டேர் காலி நிலம் 0.01 ஏக்கர் மற்றும் ரீசர்வே S.No.66/7 காலி நிலம் 0.32.5 ஹெக்டேர், காலி நிலம் 0.81 ஏக்கர், மொத்த காலி நிலம் 0.82 ஏக்கர், இந்த நிலத்தில் ஒரு பகுதி மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் நிலத்தின் பரப்பளவு 2183 ச.அடி மற்றும் கட்டிடமும் சேர்ந்தது. இதற்குண்டான **எல்லைகள் :** அழகேசன் நிலத்திற்கு **கிழக்கு,** தென்வடல் 22 அடி ரோட்டிற்கு **மேற்கு,** மோகனாம்பாள் நிலத்திற்கு **வடக்கு,** மாரப்பகவுண்டர் மற்றும் பலரின் மீதமுள்ள நிலத்திற்கு **தெற்கு.** இதன் அளவுகள் கிழமேல் வடக்காக 59 அடி மற்றும் தெற்காக 59 அடி, தென்வடல் கிழக்காக 37 அடி மற்றும் மேற்காக 37 அடி, மொத்தம் 2183 ச.அடி நிலம் முழுவதும், இதில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் மற்றும் தளவாடங்கள் இதனுடன் அனைத்து உரிமைகளும், தடபாத்தியங்களும் சகிதம்.

வேறு எந்த விதமான தீர்வுகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் தீங்கோ, பாதிப்பின்றி சட்டப்படி இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

1. சொத்தின் நிர்ணயிக்கப்பட்ட விலை : **ரூ.76,25,000/-**
2. விருப்பமுள்ள நபர்கள் டெண்டர் படிவத்துடன் முன்வைப்பு தொகை **ரூ.7,62,500/-**க்கான கேட்பு வரைவோலையை கேன்பின் ஹோம்ஸ் லிமிடெட்–ல் செல்லதக்க வகையில் சமர்பிக்கவும்.
3. டெண்டர் படிவம் பெறுவதற்கான கடைசி நாள் : **20-08-2018** மாலை 5.00 மணிக்குள்.
4. ஏலம் & டெண்டர் திறக்கும் நாள் : **21-08-2018** காலை 11.00 மணி.
5. ஏலம் நடைபெறும் இடம் : **M/s கேன்பின் ஹோம்ஸ் லிட். நெ.1, ஜான்சன்பேட்டை ரோடு, அஸ்தம்பட்டி, சேலம் - 636 007. Ph : 0427-2420017. Mobile : 7625079158, 9715621430.**
6. சொத்தினை பார்வையிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை மேற்குறிப்பிட்ட அலுவலக முகவரியில், அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.
7. மேற்குறிப்பிட்ட ஏலத்திற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கான நகல்கள் அலுவலகத்தின் கீழ் இலவசமாக கிடைக்கும்.

**தேதி : 17-07-2018**
**இடம் : சேலம்**

**ஒப்பம்**
**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,**
**கேன் ஃபின் ஹோம்ஸ் லிட்.**

Scanned with CamScanner